**09/11/2022**

**OS. No. 03 /2018**

**வா.சா. 1 லட்சுமணன்**

**குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கை வீரபத்திரன், வீரராகவன், மற்றும் அரசு அதிகாரிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் மனையில் மற்றவர்கள் வரக்கூடாது என்று கோரி வழக்கு போட்டுள்ளேன். வேறு பரிகாரம் ஏதும் கேட்கவில்லை. சர்வே எண் 384/20 என்ற சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அது கிராம நத்தத்தை சார்ந்தது. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் கிழக்கு வீரராகவன் மனையும் மேற்கே மோகன், ஹரிக்கு சொந்தமான மனை, தெற்கு வீதி, வடக்கு ரங்கசாமி நாய்க்கர் வீடு உள்ளது. தாவா சொத்தானது மதூர் கிராமம், பிள்ளையார் கோவில் தெருவில் உள்ளது.

வீரராகவனுக்கு சொந்தமான சர்வே எண் 384/23 என்றால் சரிதான். ரங்கசாமி நாய்க்கருக்கு சொந்தமான சர்வே எண் தெரியாது. சர்வே எண் 384/21 ராணி என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். சர்வே எண் 384/22 முனுசாமிக்கு சொந்தமானது என்றால் சரிதான். வீரராகவன் சொத்திற்கு கிழக்கில் உள்ள சொத்தானது நாகம்மாளுக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். சர்வே எண் 384/20 என்ற தாவா சொத்தானது ஆதியில் என் தாத்தா சின்னசாமி நாய்க்கருக்கு சொந்தமான சொத்து. அந்த சொத்தினை அவர் மதுராந்தகம் முனிசிப் கோர்டில் வா.சாஆ.1ன் மூலம் ஏலம் எடுத்த சொத்தாகும். வா.சாஆ.1ல் உள்ள சொத்தானது சூத்திர வீதியில் உள்ள சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தானது பிள்ளையார் கோவில் தெருவில் உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1ல் உள்ள சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றாலும் இரண்டும் வெவ்வேறு சொத்து என்றாலும் சரியல்ல. கிழக்கு மேற்கு 22 அடியும் வடக்கு தெற்கு 56 அடிக்கும் வழக்கு போட்டுள்ளேன். என்

தந்தை பெயர் திருவேங்கடம் நாய்க்கர். அவரின் பேரில் உள்ள பட்டாவை தா்ககல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக என் தந்தை பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து என் தந்தை பெயரிலோ என் தாத்தா பெயரிலோ ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

பாகப்பிரிவினை பத்திரம் மூலம் தாவா சொத்தை என் பெயருக்கு உருவாக்கிக்கொண்டுள்ளேன் என்றாலும் அதன் அடிப்படையில் தவறுதலாக பட்டா மாற்றிக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. கிழக்கு மேற்கு 22 அடியும் வடக்கு தெற்கு 56 அடியும் நான் சொல்வதுபோல் இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. EFGH என்று தாவா வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பகுதி எனக்கு சொ்நதமானது என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தா்ககல் செய்துள்ளேன். EFGH பகுதியானது சர்வே எண் 384/21 மற்றும் 384/22 ன் ஒரு பகுதி என்றால் சரிதான்.

மேற்படி சர்வே எண்களுக்கு உரிமையாளர்களான முனுசாமி மற்றும் ராணி இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. EFGH என்று தாவா வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பகுதி பொறுத்து பரிகாரம் ஏதும் கேட்கவில்லை என்றால் சரியல்ல, கேட்டுள்ளேன். EFGH பகுதியை பொறுத்து நான் என்ன பரிகாரம் கேட்கிறேன் என்பது தெரியாது. 1 மற்றும் 2 பிரிவாதிகள் சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் வாய்மொழி பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சென்னையில் 25 வருடங்களாக வசித்துவருகிறார் என்றால் சரிதான். அவருக்கு தாவா கிராமத்தில் வீடு எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

2ம் பிரதிவாதியின் சகோதரர் என்பதால் 1ம் பிரதிவாதியையும் தரப்பினராக சேர்த்துள்ளேன். என் சொத்திற்கு மேற்கில் உள்ள வீடு ஓட்டுவீடாக இருந்தது என்றால் சரிதான். என் வீட்டிற்கு மேற்கே என் பழைய வீட்டின் சுவரில் 3 அங்குளம் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரியதன் பெயரில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை

தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவிடும் போது மேற்படி பிள்ளையார் கோவில் தெருவில் எவ்விடத்திலும் சர்வே கல் இல்லை என்றால் சரிதான். சர்வே கல் இல்லாத பட்சத்தில் தாவா சொத்தை அளிவீடு செய்யும்போது பக்கத்தில் உள்ள அளவீடுகளை வைத்து தான் அளந்தார்கள் என்றால் சரிதான்.